அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief
Dr PRIYAKRISHNAN

Publisher
MR P. JAYAKRISHNAN

Editorial Board Members
Dr V SELVAKUMAR
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya
Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy
Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானிடவியல்
நாட்டுப்புறவியல்

குளத்தூர் வட்டாரத் தாலாட்டுப் பாடல்கள்

Thalattu Songs in Kulathoor Region

ச.சுபஸ்ரீ (Ref.No: 25438/Ph.D.K8/Tamil/Part Time/January 2018/Confirm/Dt:14.02.2022)

பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620 023 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)

S. SUBASREE (Ref.No:25438/Ph.D.K8/Tamil/Part Time/January 2018/Confirm/Dt:14.02.2022) Part-Time Ph.D. Research Scholar, Department of Tamil, Periyar E.V.R. College (Autonomous), Tiruchirapalli-620 023 (Affiliated to Bharathidasan University) ORCiD: https://orcid.org/0009-0001-3064-1146

முனைவர் இரா.குணசேகரன் , நெறியாளர் , இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620 023 (பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்றது)

***Dr. R. GUNASEKARAN, Research Advisor** , Associate Professor, Department of Tamil, Periyar E.V.R. College (Autonomous), Tiruchirapalli-620 023 (Affiliated to Bharathidasan University)*

Abstract

Folk songs are old and old and new and new. Folk songs can be called nature songs. A clear mirror folk song where Mother Nature chose to face her. Man expressed his thoughts by gestures and his emotions by sounds before he began to speak. Words were born when he expressed his emotions through sounds. When words and sounds were mixed in this language, songs arose, and before the advent of grammar, the words were arranged in harmony with music. The pride of folk songs can be known as the lifeblood of the society, the reflection of the truth, and the open release of the emotional impulse, which does not get trapped in the prison of grammar. Folk songs are classified on the basis of the context in which they are sung, the nature of the events, folk songs, lullabies, gummi songs, uppari songs, folk tales, folk tales, folk proverbs, tales, legends etc. are forms of folk literature. So in this article it is necessary to know about Kulathur folk songs.

***Keywords**: Lullabies, nursery rhymes, folk songs, grandpa's boasting, telling his story.*

முன்னுரை

நாட்டுப்புறப் பாடல் என்பது சாதாரண மக்களின் பாடல், படிப்பு இல்லாத கிராமவாசிகள், வயலில் உழுகிறவர்கள், நாற்று நடுகிறவர்கள், வாய்க்கால் வெட்டுகிறவர்கள், தண்ணீர் (ஏற்றம்) இறைக்கிறவர்கள், மீன் பிடிப்பவர்கள், ஓடம் விடுபவர்கள், வண்டி ஓட்டுபவர்கள் முதலிய மக்கள் பாடுகின்ற பாடல்தான் நாட்டுப்புறப் பாடல்கள். எழுத்தறிவில்லாத இத்தகைய தொழில் மாந்தரின் இதயத்தில் உணர்ச்சிப் பொங்கி அதுவே பாட்டாக அமைகிறது. இந்த நாட்டுப்புறப் பாடலை ஓலையில் எழுத்தாணியைக் கொண்டோ, காகிதத்திலோ எழுதியிருக்கவில்லை. மாறாக தலைமுறை தலைமுறையாக நாட்டு மக்கள் இப்பாட்டுக்களைப் பாடியும், ஆடியும், கேட்டுமே வளர்த்து வந்திருக்கின்றனர். படித்தவர்களால் படைக்கப்பட்டு, படித்தவர்களால் பாடப்பெறுவது இலக்கியமாகும். பாமர மக்களால் உருவாக்கப்பட்டு, அவர்களாலேயே பாடப்பட்டு, காப்பாற்றப்பட்டு, படித்தவர்களின் கவனத்தை ஈர்ப்பது நாட்டுப்புறப் பாடலாகும். இலக்கணப்படி எழுத வேண்டும் என்று நினைக்கின்ற போது இலக்கண விதிகள் கவிஞனின் உணர்ச்சிகளுக்குத் தடைக்கற்களாய் நின்று விடுகின்றன. ஆனால் இலக்கணத்தைப் பற்றி அறியாத பாமரர்கள் தங்கள் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்க்கும் கவிதைகள் நாட்டுப்புறப் பாடல்கள் என்றால் அது மிகையாகாது. இவைகள் தனிமனிதப் பாடல்களாகவும், சேர்ந்து பாடும் பாடல்களாகவும், பல்வேறு சூழல்களில் உணர்ச்சி வெளிப்படையான வாய்மொழியாக வெளிவருகின்ற அப்பாடல்கள் நாட்டுப்புற மக்களின் ஏக்கங்கள், ஆசைகள், இயலாமைகள், எதிர்கால கனவுகள், தேவைகள் ஆகியவைகளை வெளிப்படுத்துவையாக நாட்டுப்புறப் பாடல்கள் அமைகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் எங்கு பிறந்தவை, எவரால் பிறந்தவை, பாங்கும் இப்பாடல்களுக்கு உண்டு. நாட்டுப்புறப் பாடல்களில் உணர்ச்சி இருக்கும். எதுகை, மோனை, தொடை அமைந்து அழகைத் தரவல்லது. எனினும் அது இயற்கை அமைப்பிற்கு உட்படாமலும் இருக்கும். இதனால் தான் நாட்டுப்புறப் பாடல்களைத் தாமதமாக மலர்ந்து மணம் வீசும் காட்டுமலர்களும், மலையினின்று கீழே விழும் அருவிக்கு ஒப்பிடுவதாக அமைகிறது. அதனோடு நாட்டுப்புறப் பாடல்களின் வருணனைகளும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகின்றன. எனவே இக்கட்டுரையில் குளத்தூர் வட்டார தாலாட்டுப் பாடல்களைப் பற்றி அறிவது அவசியமாகும்.

அகராதி தரும் விளக்கங்கள்

> **ஆங்கிலத்தில் நாட்டுப்புறவியலை "Folklore" என்று அழைக்கின்றனர். இச்சொல்லை 1846இல் வில்லியம் ஜான் தாமசு என்பவர் தான் முதன்முதலில் பயன்படுத்தினார். இதற்கு முன்னர் நாட்டுப்புறவியலைக் குறிக்க "Popular Antiquities" அல்லது "Popular Literature " என்ற சொல் பயன்படுத்தப்பட்டது (செ.செந்தில், நாட்டுப்புறவியல் களம், ப.2.)**

இச்சொல்லில் நாட்டுப்புற இயலைப் பற்றிய முழுமையான பொருள் விளக்கம் இல்லாததால் இச்சொல் கைவிடப்பட்டு "Folklore" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

நாட்டுப்புறவியல் - விளக்கம்

Folk + Lore என்ற சொற்சேர்க்கைதான் *'Folklore* என்றாகி இருக்கிறது. *A New English Dictionary* இதற்கு பொருள் கூறும்போது " *The Traditional beliefs, Legends and Customs, Current among the common people, the study of these popular antiquities or popular literature* " என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது மரபு வழிப்பட்ட நம்பிக்கைகளையும், புராணங்களையும், பழக்கவழக்கங்களையும் பொதுமக்களிடம் இருந்து அறிந்து கொள்வதும், அத்துடன் பண்டையக்கால மக்களின் இலக்கியங்களை கற்பதும் நாட்டுப்புறவியலாகும்.

நாட்டு, நாடோடி, பாமரர், நாட்டார், கிராமியம் என்ற சொற்களை விட "நாட்டுப்புறம்" எனும் சொல்லே "*Folk*" என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமானதால் "நாட்டுப்புறவியல்" என்பதற்கு '*Folklore* என்று மொழி மாற்றம் செய்வதுதான் சரியானதாகும் (செ.செந்தில், நாட்டுப்புறவியல் களம், ப.3)

இச்சொல்லே பெரும்பாலான அறிஞர்களாலும், ஆய்வாளர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

நாட்டுப்புறவியல் என்னும் சொல் நாட்டார் வழக்காற்றியல், நாட்டார் வழக்கியல், நாட்டாரியல், நாட்டார் வாழ்வியல், நாட்டார் மரபியல் எனும் பல சொற்களால் வழங்கப்படுகிறது. ஆயினும் நாட்டுப்புறவியல் என்பதே பெருவழக்காயிற்று (செ.செந்தில், நாட்டுப்புறவியல் களம், ப.3)

நாட்டுப்புற இயலின் கோட்பாடுகள்

வரலாற்று நிலவியல், வரலாற்று மீட்டுருவாக்கம், இலட்சியம், செயல்திறன், உளவியல், அமைப்பியல், வாய்மொழி வாய்ப்பாடு, கலப்புப் பண்பாடு, நாட்டார் பண்பாடு, மனிதப் பண்பாடு, அரை உலகப் பண்பாடு, சூழ்நிலை ஆகிய பன்னிரண்டு அடிப்படைக் கோட்பாடுகளில் நாட்டுப்புற இயல் ஆராயப்படுகிறது என்பர் டார்சன் (செ.செந்தில், நாட்டுப்புறவியல் களம், ப.5)

நாட்டுப்புறப் பாடல்களின் அமைப்பு

இப்பாடல்களில் ஒருமுறை வந்த சொல்லோ, அடியோ மீண்டும் வருவதுண்டு. நாட்டுப்புறப் பாடல்களுக்கு அடிவரையறை இல்லை. இரண்டடிப் பாடல்கள் முதல் முந்நூறு அடிப் பாடல்கள் வரை அமைந்துள்ளன. சிறுவர் பாடல்கள் குறைந்த அடிகளையும், பெரியவர்கள் பாடும் தாலாட்டுப் பாடல்கள், தொழில் பாடல்கள், பக்திப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் போன்றவை அளவற்ற அடிகளைக் கொண்டும் திகழ்கின்றன. இவையே நாட்டுப்புறப் பாடல்களின் இயற்கையான இயல்பான அமைப்பாகும்.

நாட்டுப்புறப் பாடல்களின் மெட்டுக்கள், இசையொலிகள்

நாட்டுப்புறப் பாடல்களின் இசையொலிகள் கேட்போரின் உள்ளத்தை உருக்குகின்றன. நாட்டுப்புறப் பாடல்களின் மெட்டுக்களைப் பற்றி செ.அன்னகாமு அவர்கள் "ஏட்டில் எழுதாக் கவிதைகள்" எனும் தம் நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

நடவுப்பாடல், அறுவடைப்பாடல், களையெடுப்புப் பாடல், கரகப் பாடல், வண்டிக்காரன் பாடல், தாலாட்டுப் பாடல், சாலை போடுவோர் பாடல், பாரந்தூக்குவோர் பாடல் போன்ற தொழில் பாடல்களில் மெட்டுக்கள் இடம்பெற்றிருப்பதை இங்கு கூறப்படுகின்றன.

தாலாட்டுப் பாடல் - ஆராரோ ஆரிரரோ

ராராரோ ராரிரரோ

ரூரிரோ ரூரிரோ

ரீரீரீரீரீ (செ.செந்தில், நாட்டுப்புறவியல் களம், ப.28)

புன்னாகவராளி, நாத நாமக்கிரியா, ஆனந்த பைரவி, செஞ்சுருட்டி, குறிஞ்சி, நீலாம்பரி, மஞ்சி, கரகப்பிரியா, தோடி முதலிய இராகங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் பாடப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்களைப் பாடும் போது உடுக்கை, மிருதங்கம், தம்பட்டம், ஜால்ரா, பறை, சாரங்கி, டமாரம், நையாண்டி, மேளம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன.

தொல்காப்பியம்

மொழிக்கும், வாழ்க்கைக்கும், இலக்கியத்திற்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியத்திற்கு முற்பட்ட காலத்தில் இலக்கியங்கள் மட்டுமின்றி நாட்டுப்புறப் பாடல்களும் உண்டு என்பதை அனைவரும் ஒப்பிய கருத்தாகும்.

பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்

பாட்டின் இயல பண்ணத்தி னியல்வே (தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.134)

என்ற நூற்பாவை நாட்டுப்புறப் பாடல்களுக்குரிய இலக்கணமாகக் கருதுகின்றனர். 'பண்ணத்தி' என்பது நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கின்றது. ஆனால் இந்த நு]ற்பா நாட்டுப்புறப் பாடல்களைச் சுட்டுகின்றதா என்பது ஆய்விற்குரிய ஒன்றாக அமைகிறது. இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையைக் கூறினால் அக்கருத்து நாட்டுப்புறப் பாடலுக்குப் பொருத்தமாக அமையவில்லை. மேலும் தொல்காப்பிய நூற்பா பண்ணத்திக்கு அடிவரையறை கூறும் போது,

அதுவே தானும் பிசியொடு மானும் (தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.174)

என்று கூறுகின்றன. இந்த நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையெழுதும் போது பிசியென்பது இரண்டடியளவின் "கண்ணே வருவதாகலின் இதுவும் இரண்டியான் வருமென்று கொள்ளப்படும்" என்று எழுதுகின்றனர். பண்ணத்திக்கு வகுக்கும் அடிவரையறை நாட்டுப்புறப் பாடல்களுக்கு இல்லை.

நாட்டுப்புறப் பாடல்களின் பிரிவுகள்

தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையில் நினைத்தும் திருவிழாக்கள், பண்டிகைகள், சில முக்கிய குடும்ப நிகழ்ச்சிகள் போன்றவை சாதிக்குச் சாதி, இடத்திற்கு இடம் சில நிலைகளில் வேறுபட்டாலும் பல வகையில் ஒன்றுபடுவதைக் காணமுடிகிறது. தமிழில் உள்ள நாட்டுப்புறப் பாடல் வகைகளைக் குழப்பமற்ற முறையில் பகுக்க வேண்டும் என்று அப்பாடல்களை, 1. குழந்தைப் பாடல்கள் 2. பக்திப் பாடல்கள் 3. தொழிற் பாடல்கள் 4. கொண்டாட்டப் பாடல்கள் 5. உணர்ச்சிப் பாடல்கள் 6. பன்மலர்ப் பாடல்கள் என ஆறு வகைகளாகப் பகுக்கப்படுகின்றன. இவற்றுள் தாலாட்டுப் பாடல்களை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

தாலாட்டுப் பாடல்கள்

தாய் ஆழம் காண முடியாத ஒர் அன்புக்கடல். அந்த அன்புக் கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு ஆகும். வலகை விழிப்புறச் செய்யத் திருப்புள்ளியெழுச்சி பாடுவதைக் கேட்டு இருக்கிறோம். விழிகளை மூடித் தூங்குவதற்குத் தாய் தாலாட்டு இசைக்கக் காண்கிறோம். அழுது அடம்பிடிக்கும் குழந்தைகளை அடக்கும் ஆயுதமாக அன்னையரிடம் தாலாட்டு அமைந்திருக்கின்றது. விழித்துக் கொண்டிருக்கும் குழந்தைக்கு வேடிக்கை காட்டும் தாய், குழந்தை விழிகளை மூடித் துயில வேண்டும் என்று எண்ஹம் போது பாட்டு இசைக்கின்றாள். இப்பாட்டு தாலாட்டு எனப்படும்.

> **தால் என்ற சொல் நாக்கு என்று பொருள்படும். தாய், ராராரோ என்று நாவினை ஆட்டிப் பாடுவதால் தால் + ஆட்டு - தாலாட்டு எனப் பெயர் பெறலாயிற்று. இத்தாலாட்டினைத் தாய்மார்கள் ராராட்டு, ஒராட்டு என்று வழங்குவதுமுண்டு. இவை, ஒசை காரணமாக வழங்கும் பெயர்கள் (செ.செந்தில், நாட்டுப்புறவியல் களம், ப.40)**

தாலாட்டு ஊற்றெடுத்து ஆறாகிப் பெருகி ஓட அடிப்படைச் சக்தி, குழந்தையின் அழுகையே ஆகும். வயதானவர்களின் அழுகை பொருளோடு அமைந்திருக்கின்றன. கண்ணகி, சீதை, பாஞ்சாலி இவர்களின் அழுகை, மதுரை, இலங்கை, அத்தினாபுரம் ஆகிய இவற்றை அழித்தது. புரிந்து கொள்ள முடியாத குழந்தையின் அழுகை, தமிழை வளர்த்தது. தாலாட்டுப் பாடலால் தமிழும் வளர்ந்திருக்கின்றன.

தாலாட்டுப் பாடல்களை இரண்டாகப் பிரித்து ஆராய்வது பொருத்தமாக அமைகின்றன. தாய்மார் தங்கள் பரம்பரையாகவும், பிறரிடம் இருந்து அறிந்தும் பாடிவரும் பாடல்கள் ஒருவகையாகும்.

இவ்வகைப் பாடல்களால் வளர்ந்த நம் தமிழ்ப் புலவர்கள், அவற்றில் ஈடுபாடு கொண்டு இயற்றிய பாடல்கள் மற்றொரு வகையாகும்.

ஓரளவு எழுத்தறிவுள்ள தாய்மார்களும், எழுத்தறிவு இல்லாத தாய்மார்களும், தங்கள் குழந்தைகளைத் தூங்கச் செய்ய ஒரு குறிப்பிட்ட அளவு தாலாட்டுப் பாடல்களைத் தெரிந்து வைத்திருக்கின்றனர். ஐம்பது ஆண்டுகட்கு முந்திய தாய்மார்கள் ஒவ்வொருவரும் நூறு பாடல்கள் வரை தெரிந்து வைத்திருந்தனர். அவர்களுக்குப் பிற்பட்ட தாய்மார்கள் போதும் என்ற அளவிற்குத் தெரிந்து வைத்திருந்தனர். ஒன்றிரண்டு பாடல்கள் கூடத் தெரியாத தாய்மார்களும் உண்டு. இவ்வாறு குழந்தையுள்ள இடம் எல்லாம் குடி கொண்டுள்ள தாலாட்டுப் பாடல்களின் மொத்த எண்ணிக்கை, குறிப்பிட்டுச் சொல்ல முடியாததாக அமைகின்றன.

தாலாட்டுப் பாடற்பொருள்

குழந்தைகளுக்காகத் தாய் பாடும் வண்ண வண்ண பாடல்களைக் கேட்கும் போது, அப்பாடல் குழந்தையில்லாத போது தாய் பட்ட துன்பங்கள், குழந்தைப் பேற்றை வேண்டிச் செய்த அறங்கள், குழந்தையின் அழுகைக்குக் காரணம் வினவல், குழந்தை பிறந்ததன் காரணங்களை அடுக்கிச் சொல்லல், குழந்தையை வருணித்தல், குழந்தையின் அம்மானை, தந்தை, பாட்டன், அத்தை முதலியவர்களின் பெருமை பேசுதல், குழந்தை பெருமை, மிக்கவர்களின் பேரனோ பேத்தியோ என்று பூரித்தல், குழந்தை படுத்துள்ள தொட்டில் சிறப்பு, காது குத்தும் விழா முதலியவற்றை வருணித்தல், நித்திரை செய்யென வேண்டல் முதலியனவும் இறை தொடர்புடைய சில நீண்ட கதைகளும் பொருளாய் தாலாட்டு பாடல் அமைந்திருக்கின்றன.

தாலாட்டு வடிவம்

தாலாட்டுப் பாடல்களின் தொடக்கம் வெறும் நாவசைகளின் ஒலிகளேயாகும். இவ்வரிகள் இசை நயத்துக்காகத் தாயால் இட்டுக் கட்டடப்பட்டது. அச்சொற்களுக்கு ஓசைநயம் உண்டு. பொருள் கிடையாது என்றே கூறப்படுகின்றன.

ஆராரோ ஆரிரரோ

ஆராரோ ஆரிரரோ

ராராரோ ராரிரரோ

ராராரோ ராரிரரோ

துரிதுரி . . . . . துரிதுரி . . . ஆஸ்

ராரீ ராரீ ராராரோ

ராரீ ராரீ ராராரோ

லு . . . லுலாய் . . . லு . . . லு . . . லாயீ

எனத் தாலாட்டுப் பாடல் தொடங்கும். தாலாட்டின் முடிவிலும்,

ராரீ ராரீ ராரீ ஆஸ்ச்

ராரீ ராரீ ராரீ ஆஸ்ச்

தூரி தூரி தூரி தூரி ஆஸ்ச்

தூரி தூரி தூரி தூரி ஆஸ்ச் (செ.செந்தில், நாட்டுப்புறவியல் களம், ப.42)

என்று மிக மென்மையான குரலில் பாடி, தொட்டிலை மிக மெதுவாக ஆட்டி நிறுத்திவிடுகின்றனர்.

குழந்தை களைத்து விட்டது. தூங்கினால் அதன் உடம்புக்கு நல்லது என்பதை அறிந்து தாய்,

கண்ணே கண்ணுறங்கு

கண்மணியே நீயுறங்கு

என்று தாலாட்டுகிறாள். அக்குழந்தை அழுது அடம்பிடிக்குமானால்,

ஆரடித்தார் நீயழுதாய்

அடித்தாரைச் சொல்லியழு

என்று தாய் கேட்கிறாள். மேலும்,

மாமன் அடித்தானோ

மல்லி பூச் செண்டாலே

அண்ணன் அடித்தானோ

ஆவாரங் கொம்பாலே

பாட்டி அடித்தாளோ

பால் வடியும் கம்பாலே

ஆராரோ ஆரிராரோ

ஆரிராரோ ஆராரோ

ஆரடிச்சு நீயழுதாய்

கண்மணியே கண்ணுறங்கு (பொன்னம்மா, குளத்தூர்)

என இப்பாட்டின் மூலம் தாயானவள் குழந்தையின் அழுகையைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைப்பதை அறியமுடிகிறது.

தாலாட்டுப் பாடாத பெண்ஹும் ஒப்பாரி வைக்காத பெண்ஹும் தரணியில் காணுதல் அரிது என்ற பெரியோர் வாக்குக்கு ஒப்ப இப்பாடல்கள் பெண்களிடையே மலிந்து காணப்படுவதை உணரமுடிகிறது.

பெண் என்றாலே பேயும் இறங்கும் என்ற பழமொழி ஒரு புறம் சொல்ல, மற்றொரு புறம் பெண் குழந்தை என்றால் தாலாட்டு ஊமையாகி விடுகின்றது என்ற பழமொழியையும் இங்கு ஒப்புநோக்குதல் சரியானதாகும். ஒரு பெண் இனம் மற்றொரு பெண் இனத்தாலே அழிந்து கொண்டிருப்பதைப் பலர் இன்று ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

கருப்பையில் உருவான நேரம் முதற்கொண்டு ஒவ்வொரு பெண் சிசுவும் எமனிடம் போராட்டம் நடத்திக் கொண்டு தான் தங்கள் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றன. இன்று பல ஆயிரம் பெண் குழந்தைகள் கருவிலே அழிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

பிறந்த குழந்தை ஆணாக இருந்தால் ஒரு பெண் அவனை தாலாட்டும் முன் என் கண்ணே செல்லமே, துரைசாமி, தங்கம் கலெக்டரு, வக்கிலு என வாழ்த்திப் பாடுவதையும் காணமுடிகிறது.

ஆராரோ ஆரிரரோ - என் கண்ணே

ஆரிராரோ ஆராரோ!

கண்ணே நவமணியே

கானலியே பிறந்தாயோ?

என்ன நான் சொல்வேனோ - கண்ணே நீ

இந்திரனோ சொல்லி விடு (சந்திரா, குளத்தூர்)

என இப்பாடலில் ஆண் குழந்தையைப் பற்றியே புகழ்ந்து பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் பாடல் உருவாகிறது. தாலாட்டில் தாய்மையின் தவிப்பும், பூரிப்பும், எதிர்பார்ப்புகளும் வைகறையில் வசந்தங்களும், இறைவனின் இனிய நாமங்களும், வரலாற்றுப் பெட்டகங்களும் எழுந்திருப்பதை காணலாம். தாலாட்டுப்பாடல்களுக்கு அடிவரை கிடையாது.

குழந்தையின் அழுகையை நிப்பாட்ட தாய் பாடும் பாடல்

குழந்தையின் அழுகை ஒலியே தாலாட்டின் உதயகீதம். குழந்தை அழத் தொடங்கியதும் அதன் அழுகையை ஓயவைத்து தூங்க செய்ய தாய் தன் மடியிலோ, தொட்டிலிலோ, தோளிலோ, கைகளிலோ, குழந்தையை இட்டு தாலாட்டு இசைக்கின்றனர்.

மாமன் அடிச்சாரோ

மல்லிகைப்பூச் செண்டாலே

அண்ணன் அடிச்சானோ

ஆவாரம் செண்டாலே

பாட்டி அடிச்சாரோ

பால் வடியும் கம்பாலே

தொட்டாரைச்சொல்லி அழு

தோள் விலங்கு போட்டு வைப்பேன்

அடித்தாரைச் சொல்லியழு

ஆக்கினைகள் செய்திடுவோம்... (செல்லத்தாய், குளத்தூர்)

தாய் தன் குழந்தையிடம் வினவுவது போல, உன்னை யார் அடிச்சார்? அடிச்சாரைச் சொல்லியழு என்றும் உன்னை யாராவது கேட்டார்களா என்றும் தொட்டவரை ஆக்கினைகள் செய்திடுவேன். தொட்டவருக்குத்தோள் விலங்கு பூட்டுவேன் என்று கூறுகிறாள்.

குழந்தைகள் ஒன்றோடு ஒன்று விளையாடும் போது யாராவது அடித்து குழந்தை அழுது கொண்டு வந்தால், அடித்தவரை அழைத்து ஏன் அடித்தாய், அடிக்காமல் விளையாடு என்று ஆக்கினை செய்து அனுப்புவது இன்னும் காணக்கூடிய காட்சியாகும்.இங்கு ஆக்கினை என்பது 'தண்டனையை' குறிக்கும் செயலாக குளத்தூர் வட்டத்தில் பயன்பாட்டில் உள்ளது.

பாட்டி அடித்தாரோ,

பால்வார்க்கும்சங்காலே

அத்தை அடித்தாளோ (ஆயிபொன்னு, குளத்தூர்)

தொட்டவர்க்கு தோள்விலங்குப் பூட்டுவேன் என்றாள். விலங்குப் பூட்டுவது என்பது இப்பாடலில் தோளுக்கு என்று சொல்லப்படுகிறது. தோளுக்கு விலங்கு பூட்டுவது நடைமுறையில் இல்லை. சில குழந்தைகள் யாராவது தொட்டாலே அழும். தொட்டரை அவர்களின் முதுகில் அடி போடுவேன் என்பதை தாய் இவ்வாறு குழந்தைக்கு ஆறுதலாகச் சொல்கிறாள்.

அரளி பூ செண்டாலே (காமாட்சி, குளத்தூர்)

என வரும் பாடல்களில் அக்குழந்தை உள்ள இடம் கூட்டு குடும்பம் என அறியமுடிகிறது. கூட்டு குடும்பம் என்பதால் குழந்தைகளுக்கு பாட்டி தான் பாலைச் சங்கால் கொடுப்பாள் என்பது வழக்கத்தில் உள்ளது. பால் வாக்குஞ்சங்கு என்பது குளத்தூர் சுற்றுவட்டாரத்தில் வழங்கிவரும் வழக்குச்சொல் ஆகும். பாலை குடித்து முடித்ததும் சங்கால் குழந்தையின் தலையை மூன்று முறை சுற்றி பின் சங்கை தலைகீழாக கவிழ்த்து கையை தரையில் நொடிக்கிறார்கள். இது குழந்தைக்கு கண் பட்டு விடாமல் இருப்பதாக செய்யும் சடங்காகும். வயிறு நிறைய பால் குடிச்ச குழந்தையை யாராவது பார்த்தால் கண் திருஷ்டி பட்டு விடாமல் இருப்பதற்காக இவ்வாறு செய்வதாக தாய்மார்கள் கூறுகிறார்கள்.

வெண்ணெய்யில்விலங்கு பண்ணி

வெயிலில் போட்டு வைப்போம்

மண்ணிலே விலங்கு பண்ணி

மழையிலே போட்டு வைப்போம் (சின்னபொண்ணு, குளத்தூர்)

என்று கூறும் தாயின் கற்பனை அவர்களையும் மிஞ்சி கற்பனை திறன் உடையதாக அமைந்திருக்கின்றது. தாய் தன் குழந்தை அழும்போது, நீராட்டும் போது, உறங்க வைக்கும் போது, தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது தாலாட்டு பாடினாள்.

தாய் மட்டுமல்லாது தாயின் பாட்டிமார்கள், தாயின் சகோதரி, வளர்ப்புத்தாய், குழந்தையின் அத்தை, தமக்கை ஆகியோரும் குழந்தைக்கு தாலாட்டு பாடுவார். இருப்பினும் தாய் பாடும் தாலாட்டே உணர்வாலும் நெகிழ்வாலும் சிறந்ததாக கூறப்படுகிறது. குழந்தையின் அழுகையை தாய் குறிப்பிடும்போது கற்பனையின் சிகரத்திற்கு சென்றுவிடுகிறாள். வெறும் புகழ்ச்சி இல்லை தான் உணர்ந்த உணர்ச்சியையும் பெற்ற அனுபவத்தையும் அல்லது கண்ட காட்சியையும் முழுமையாகவும் தெளிவாகவும் உணர்ந்து அனுபவித்து கண்டு இன்புறுமாறு அமைத்துக் காட்டும் கலையே கற்பனை எனப்படும் .

ஆரடிச்ச கண்ணீரு ஆறாப்பெருகுது

ஆறாப்பெருகிநீராசொரிகிறது

வாய்க்காலாஓடி வழிப்போனார் காலலம்பி

ஆத்துக்குப் பாஞ்சியானை குளிப்பாட்டி

குலத்துக்குப் பாஞ்சி குதிரை குளிப்பாட்டி

என்று தண்ணீர் பெருக்கை குறிப்பிடுகிறாள் (ஆராயி, குளத்தூர்)

குழந்தை பிறப்பதற்கு முன் தாய் குழந்தைக்காக ஏங்கும் ஏக்கம் சொல்லும் தரமன்று. ஒவ்வொரு நாளும் தாய்மை கிட்டாதா என எதிர்பார்த்து மனம்வேதும்புவாள். அவளின் உணர்வுகள் எண்ணங்கள் அனைத்துமே பிள்ளை பேறடைய பேர் வேண்டும் எனும் ஆவலைச் சுற்றியே அமைந்திருக்கும்.

குழந்தையைத் தொட்டிலில் இட்டு அதன் முன்னே சிறப்புகளை எல்லாம் தொகுத்து தாலாட்டும் பருவமே பிள்ளைத்தமிழின் தாலப்பருவம் என்று கூறுவர். குழந்தை பிறந்தவுடன் தாலாட்டுகின்ற போது குழந்தை பெறுவதற்கு முன் தாய் அடைந்த துன்பங்கள் அவப்பெயர்கள் செய்த அறங்கள் பாடல்களாய் வெளிவருகின்றன.

மலடி மலடி என்று

மானிடர்கள் ஏசாதே

மலட்டுக்குறை

நீக்க வந்த மரகதமே

ஆடு மயிலாட அழகுமயில்

பந்தடிக்க தோகை

மயில் ஆடுதுன்னு

துணைமயிலாவந்தவளோ (கருப்பாயி, குளத்தூர்)

என்ற நாட்டுப்புறப் பெண்கள் தாலாட்டில் பிள்ளை பெறுவதற்கு முன் சமுதாயம் ஏசியமை புலப்படுகிறது.

குழந்தையைக் கடவுளோடு ஒப்பிட்டுக் கூறுதல்

"பெண்ணின் மடியில் இறையன்பு வளர்கிறது" என்கிறார் கவிஞர் இக்பால். தாய் தன்னுடைய தாலாட்டில் பிள்ளைக்கு பக்தி, பரோபகாரம் போன்ற உணர்வுகளை உருவாக்க விழைகினாள். இறைவனில் பண்புகளையும், இதிகாச புராண நிகழ்ச்சிகளையும் பிள்ளைகளின் செவிகளில் ஏற்றுமதி ஆக்கி, பக்தி நிறைந்த ஒழுக்கமான மனிதனாக இறக்குமதி செய்கிறார். அன்னையின் மடியில் இருந்து கேட்கப்படுகின்ற கதைகள் மறக்கப்படுவதில்லை. தாயின் பிள்ளைகளையும் கடவுளோடு ஒப்பிட்டும், இந்த தாலாட்டு அமைகிறது.

சங்கராலிங்கமோ

ஏன் ஐயாசமுத்திரத்து

ராமலிங்கமோ

பூர்வீக லிங்கத்திற்கு பூஜை

செய்ய வந்தவனோ

மரம் பெருத்த சதுரகிரி

மணல் பெருத்த இராமேஸ்வரம்

நீ - பூபெருத்தசீமைதேடி —

என் பூ முடிக்க வந்தவனோ (செல்லத்தாய்)

தாய் குழந்தைக்கு தாலாட்டு பாடும் போது சதுரகிரி மலையில் நிறைய மரங்கள் இருப்பதையும் இராமேஸ்வரத்தில் மணல் அதிகம் இருப்பதையும், பூக்கள் அதிகம் இருக்கும் ஊரையும் கூறி தாலாட்டு பாடலை பாடுகிறார்.

மதுரை அழகரோ

மாமதுரை சொக்கரோ

திருமால் அழகரு

திருச்செந்தூர் வேலவரு

வேலவருகொடுத்த

என் கண்ணே கண்ணுறங்கு (அம்முனி, குளத்தூர்)

என்று தாய் இப்பாட்டில் குழந்தையை முருகன், திருமால், சிவன் போன்ற தெய்வங்களுடன் ஒப்பிடுகிறார்
.

பழம்பெருமைபேசுதல்

நாட்டுப்புற மக்கள் பழம் பெருமை பேசி பெருமிதம் கொள்ளும் நிலையை காணலாம். கடந்தகால வாழ்வின் பெருமைகளை வருடிப் பார்த்து சுகம் அனுபவித்து புதிதாக வருபவரிடம் சென்ற வாழ்வின் செல்வ நிலையை கூறிப்பெரிய மூச்சு விடுவர்.

சந்தன வில்வமரம்

சாமி பிறந்த இடம்

குங்குமம் வில்வமரம்

குழந்தை பிறந்த இடம்

வையையாம்பொய்ய

வடக்கையாம்பாலாறு

பாலாறு பார்க்க வந்த என்

பசுங்கிளியே கண்ணுறங்கு (பிச்சையம்மாள், குளத்தூர்)

என்று தாய் நாம் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தோம் என்பதை தாலாட்டுப் பாட்டில் தெரிவிக்கின்றார்.

குழந்தையை தாய் வரமாக எண்ணுதல்

தாய் தொடர்ந்து புரிந்துவரும் நல்லறங்களாலும் இறைகருணையாலும் பிள்ளை பிறக்கிறது. நீண்ட காலத்திற்குப் பின் பிறந்த குழந்தையானதால் அக்குழந்தையை தான் பெற்று எடுத்ததாக கருதாமல் இறைவன் அளித்த பிச்சையாக எண்ணுகிறாள்.

சேத்தில் ஒரு செவ்வரலி

நூற்றில் ஒரு பூ பூக்கும்

அதில் அடக்கிட க்குமாம்

ஐந்து தலை நாகம்

தீண்ட நாகருக்கு

ஆவுடையார் திரிசடைக்கு

பூ முடிக்க ஆருச்சாம்கோபம்

ஆவுடையார் மடி மேலே ஏறிவந்து

தீராத வினையெல்லாம்

தீர்த்து வைப்பாள்" (செல்லத்தாய், குளத்தூர்)

பூநாகம் நாக வழிபாட்டின் மூலம் குழந்தை வரம் கிடைக்கும் என்று பெண்கள் இன்றும் நாகர் வழிபாடு செய்கின்றனர். மேலும் ஒவ்வொரு மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப்பெருமானை எண்ணி பெண்கள் குழந்தைக்காக வழிபாடு செய்கின்றனர்.

மலையை சுற்றி வெட்டிவேறு

சண்முகநாதனுக்கு மாத

ஒரு கார்த்திகேயாம்

மறக்காமல் நடந்ததற்கு

சண்முகநாதர் மடி குழந்தை தருவார் (தங்கம்மாள், குளத்தூர்)

என்று நாட்டுப்புற மக்களிடையே நம்பிக்கை இன்றும் காணமுடிகிறது. குழந்தையைத் தாலாட்டும்போது இறைவனின் உறவுமுறைகளை சொல்லித் தாட்டுகின்றனர்.

கண்ணே கண்ணுறங்கு

கானகத்துமயில்உறங்கு

பொண்ணே உறங்கு பூ

மரத்து வண்டு உறங்கு

பவளநிறகந்தரு

ஜோதி நிறவேலவரு

வள்ளிஅழகுக்குவள்ளி

வலதுதேமலுக்கு

கூந்தல்அழகுக்கு

சிலபேறுகொண்டாங்க

குரவவேசம்.

ஓடினாவள்ளி

ஒழிஞ்சா வனம்தேடி

தேடினார்வேலவரு

வள்ளிகாணோம் என

வள்ளிக்கும் தெய்வானைக்கும்

மயிர்பிடிசண்டையாம்

வள்ளிமேலகுத்தம்இல்ல

மயிர்விடு தெய்வானை

திங்கதிணை விதைத்து

அண்ணமாறு தேவவள்ளி

ஓடிச்சாதிணை கதிர

வட்டவட்டபாதையில்

கொட்டினா திணை கதிர

வேலவரு சாமிக்கு கல்லா

உரலுசேர்த்து கருங்காலி

உலக்கை சேர்த்து இடுச்சா திணை மாவை

தேன் விட்டு குழப்பி உண்ணுங்க சாமினு

ஊட்டினால் திணைமாவ (செல்லத்தாய், குளத்தூர்)

என்று இப்பாடலில் குழந்தையைத் தாலாட்டும் போது முருகன், வள்ளி, தெய்வானை உறவுமுறைகளை அழகாகப் பாடுகிறாள் தாய்.

குழந்தையின் அழுகையை நிறுத்த தாய் வெற்றுச் சொற்களுடன் இசையை கூட்டி சொல்லமைத்து ஒலி எழுப்புவாள் இதுவே தாலாட்டின்தொடக்கமாகும்.

ராராரோராராரோ

ராரிராரோராராரிரோ

வைகைபெருகிவர

வாலைமீனுதுள்ளிவர

துள்ளிவந்தமீன்களுக்கு

தூண்டில்வலை போட்டாரோ

சொக்கநாதர் தூண்டில்மேலே

துள்ளிவந்தபாலகனே

கண்ணே கண்ணுறங்கு (சின்னாத்தா, குளத்தூர்)

மாமன் பெருமை பேசுதல்

தாயுடன் பிறந்த ஆண்களை மாமன்மார்கள் என்று குறிப்பர். தாய் மாமன் பெருமை பாடாத தாலாட்டு பாடல்களேஇல்லை எனலாம். தன் வீட்டு பெருமையை விட்டுக் கொடுக்காதவர்கள் பெண்கள். தாய்மாமன் வளம் அற்றவனாக இருப்பினும், தாய் வெளிபடுத்த மாட்டாள். தன் குடும்பத்தின் நிலையைவெகுவாக பாராட்டும் மரபு இன்றும் காணப்படுகிறது.

பாப்பா தெருவிலே

பட்டு வந்து விக்கையிலே

பட்டவிலை தெய்கும்

பாண்டிமன்னன் உன்மாமன்

செட்டி தெருவிலே

செண்டுவந்து விக்கையிலே

செண்டுவிலை தெய்கும்

சேவலருஉன்மாமன்•••

பட்டால்தொட்டிகட்டி மாமன்மாரு

காதுகுத்த வருவாங்க

மாமன்மாறுமாமன்மாறு

எத்தனைப்பேரு காதுகுத்த

வாராக••••.

வண்ணலட்சம்பொன்கொடுப்பர்

உன்மாமன்

கோடிஇலட்சம்பொன்கொடுப்பார்

உன்மாமன்

திரவியங்கள் என கோடி தேடி

வைப்பார் -உன் மாமன் (சரசுவதி, குளத்தூர்)

என் மாமன் பெருமையைப் பாடுகின்றார் தாய்.

மலையிலே மாடு மேயமாயக்

கண்ணனுக்கு மணிச்சத்த ஓசையிலே

ஊதினான் பூங்குழலே மாயகிருஷ்ணன்

உச்சிமலையெல்லாம்ஓசையிட

வாசித்தார்பூங்குழலமாய

கிருஷ்ணன்வனங்கள் எல்லாம்

அழைச்சாறு ——மாயக்கண்ணன்.

வண்ணலட்சம்பால்பசுவ

பால் பசுவைத் தேடி

வாங்கிவந்த

பால் பசுவுக்கு

வாயேல்லாம் தங்கநிற

கொண்டுவந்த பால்பசுவுக்கு

கொம்புரெண்டும் தங்க நிறம் (செல்லத்தாய், குளத்தூர்)

தாய் தன் மகளுக்கு பால் கொடுக்க பசுவை சிறப்பித்துப் பாடிஅழைக்கின்றாள்.

தன் வரலாறு கூறுதல்

குழந்தை பருவத்தில் தாய் கூறும் செய்திகள் பசுமரத்து ஆணி போல் பதியும், வளமான வாழ்வு வாழ்ந்த தாயும் பாடுகிறாள் தாலாட்டு. வறுமையில் வாடிய தாயும் பாடுகிறாள் தாலாட்டு.

முத்து சிரிப்பழகா

முல்லைப்பூ பல்லழகா

வைக்கோல்குடிசையிலே

விளையாட வந்தாயோ

ஏழைக் குடிசையிலே

ஈரத் தரையில் மேல

தாழம்பாய் போட்டு

தவழ்ந்தோட வந்தாயோ

தரையெல்லாம் மேடுபள்ளம்

தவழ்ந்தால் உறுத்தாலையோ (காமாட்சி, குளத்தூர்)

பணக்காரர் வீட்டில் பிறக்காமல் ஏழை குசையிலே பிறந்தாயோ, உனக்கு பாலும் கொடுக்க முடியவில்லை என ஒரு தாய்பரிதவிக்கிறாள்.

விவசாய குடும்பத்திலே பிறந்த பெண், மரத்திலே தொட்டில்கட்டி வயலிலே வேலை செய்கிறாள். அழுகின்ற குழந்தையை வரப்பினிலே கிடத்திவிட்டு அழாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்கிறாள். துணி மூட்டையை வைத்து உனக்கு தலையணை வைத்தால் தூக்கம் வருமா என்று வருந்துகின்றாள்தாய்.

தாய் பிள்ளைக்காக ஏங்குதல்

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கின்ற வாழ்விலே பிள்ளைக்கனியமுது ஒன்று பெற்றிட வேண்டும் என்று அனைவரும் விரும்புவது இயற்கையே. அப்பிள்ளை கனியமுது இல்லாவிட்டால் அவர்களது வாழ்க்கை பற்றுக்கோடு இல்லாமல் போவதாலும் அவர்கள் குலம்வளரவாய்ப்பு இல்லாமல் போவதாலும் சமூகம் அவர்களை மலடி மலடி என்று கூறுவதாலும், பிள்ளைபேற்றை அனைவரும் விரும்புகின்றனர்.

கிண்ணியிலேபோட்ட சோற்றைக்

கீரித்தின்னபிள்ளை இல்லை

ஊருக்குப் போகையிலே

உடன் வர பிள்ளை இல்லை

என்று வருந்துகிறாள்.

பூக்கின்ற காலத்திலே

பூமாரி போனேனே

காக்கின்ற காலத்திலே

காய் மாறி போனேனே (வேணி, குளத்தூர்)

என்று வெந்து சாகுகிறாள்.

முடிவுரை

தாலாட்டுப் பாடல்கள் குறுகிய அளவு உடையன. ஆனால் பெரும்பாலான தாலாட்டுப் பாடல்களுக்கு அடிவரையறை இல்லை என்று கூறலாம். தாயின் மனநிறைவுகேற்பவும், குழந்தையின் உறக்கத்திற்கு ஏற்பவும் தாலாட்டுப் பாடல்கள் பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கும். தாலாட்டு பாடலின் பண் நீலாம்பரி ஆகும். தாய்மார்கள் நினைத்தபோது நினைத்தபடி பாடுவதால் தாலாட்டுப் பாடல்களில் வேறுபாடு இருப்பதை அறியலாம்.

துணைநூற் பட்டியல்

அரிமா இளங்கண்ணன். *பன்னிரு ஆழ்வார்கள்,* இயல் பதிப்பகம், சென்னை, 1973.

அழகப்பன், ஆறு. *நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு,* கழக வெளியீடு, சென்னை, 1973.

அன்னகாமு, செ. *ஏட்டில் எழுதாக் கவிதைகள்.* சர்வோதயப் பிரசுரலாயம், தஞ்சாவூர்.

இராமசுப்பிரமணியம், வ.த. (உ.ஆ.). *புறநானூறு மூலமும் தெளிவுரையும்.* திருமகள் நிலையம், சென்னை.

இராமநாதன், ஆறு. *தமிழர் கலை இலக்கிய மரபுகள்,* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2001.

உ.வே.சா. *சிலப்பதிகாரம்,* உ.வே.சாமிநாதன் நூல் நிலையம், சென்னை, 1955.

கிருட்டினசாமி, க., *நாட்டுப்புற இலக்கியம் ஒர் ஆய்வு,* சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2004.

கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை.மு. (உ.ஆ.). *கம்பராமாயணம் — பால காண்டம் (மூலமும் உரையும்).* உமா பதிப்பகம், சென்னை, 4 ஆம் பதிப்பு, 2024.

சக்திவேல், சு. *நாட்டுப்புற இயல் ஆய்வு.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சண்முகசுந்தரம், சு. *நாட்டுப்புற இலக்கிய வரலாறு.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சரசுவதி வேணுகோபால். *தமிழக நாட்டுப்புறவியல்.* தாமரை வெளியீடு, மதுரை.

சற்குணம், *தமிழக நாட்டுப்புற இயல்,* சாரதா பதிப்பகம், சென்னை, 1976.

சிதம்பரநாத முதலியார் எழுதிய உரைக் குறிப்புகளுடன். *முத்தொள்ளாயிரம்.* பொதிகை மலைப் பதிப்பு, தென்காசி, மூன்றாம் பதிப்பு, 1957.

சிவசுப்பிரமணியன், எம்., *சங்கஇலக்கியம்,* மாணிக்கவாசகன் பதிப்பகம், திருச்சி, 1919.

செந்தில், செ. (உ.ஆ.). *நாட்டுப்புறவியல் களம்,* சாரதா பதிப்பகம், சென்னை.

சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.). *சிலப்பதிகாரம்.* திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1982.

திருஞானசம்பந்தம், ச., *தொல்காப்பியம் (பொருளதிகாரம்),* கதிர் பதிப்பகம், திருவையாறு, 1994.

பிச்சை, *தமிழ்நாட்டுப்புற இயல் ஆய்வின் வரலாறு,* சென்னை, 2003.

வரதராசனார், மு. (உ.ஆ.). *திருக்குறள்.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2001.

References

Arima Ilangkannan. Panniru Aazhvarkal, Iyal Pathippagam, Chennai, 1973.

Alagappan, Aaru. Nattupura Padalkal Thiranaivu, Kazhaga Veliyeedu, Chennai, 1973.

Annakamu, Se. Yettil Ezhutha Kavithaigal. Sarvodaya Pirasuralayam, Thanjavur.

Ramasubramaniyam, Va.Tha. (Ed.). Purananooru Moolamum Thelivuraiyum. Thirumagal Nilayam, Chennai.

U.Ve.Sa. *Silappathikaram*, U.Ve.Saminathan Nool Nilayam, Chennai, 1955.

Krishnasamy, K., *Nattupura Ilakkiam Oor Aaivu*, Seethai Pathippagam, Chennai, First Edition, 2004.

Gopalakrishnamaachariyar, Vai.Mu. (Ed.). *Kambaramayanam — Balakandam (Moolamum Uraiyum)*. Uma Pathippagam, Chennai, Fourth Edition, 2024.

Sakthivel, Su. *Nattupura Iyal Aaivu*. Manivasagar Pathippagam, Chennai.

Shanmugasundaram, Su. *Nattuppura Ilakkiya Varalaru*. Manivasagar Pathippagam, Chennai.

Saraswathi Venugopal. *Tamilaga Nattupuraviyal*. Thamarai Veliyeedu, Madurai.

Sargunam, *Tamilaga Nattupura Iyal*, Saratha Pathippagam, Chennai, 1976.

Chidambaranatha Mudaliyar Ezhuthiya Urai Kurippugaludan. *Mutholayiram*. Pothigai Malai Pathippu, Thenkasi, Third Edition, 1957.

Sivasubramanian, M., *Sanga Ilakkiyam*, Manikavasagam Pathippagam, Trichy, 1919.

Senthil, Se. (Ed.). *Nattupuraviyal Kalam*, Saratha Pathippagam, Chennai.

Somasundaranar, Po.Ve. (Ed.) *Silappathikaram*. Thirunelveli, Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam, Chennai, 1982.

Thirugnanasambandam, C. (Ed.). *Tholkappiyam Porulathikaram Moolamum Uraiyum*. Kathir Pathippagam, Thiruvaiyaru, 1994,

Pitchai, *Tamilnattupuraviyal Iyal Aaivin Varalaru*, Chennai, 2003.

Varatharasanar (Ed.). *Thirukkural*. Saiva Siddhantha Noorpathippu Kazhagam, Chennai, 2001.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com